முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2018 யூலை

## (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும்

(Business Law and Ethics)

2018 – 07 - 21
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடம்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

பக்கங்கள் : 07
வினாக்கள் : 10

(3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட* ***விடைப் புத்தகத்தில்*** *பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரு மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *நீங்கள் ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.*

(5) ***வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு* ***வினைச் சொல்*** *உள்ளடங்கியிருக்கிறது (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பத்து (10) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** முதல் **1.7** வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை அவ்வினாவுக்குரிய இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** இலங்கையில் காணப்படுகின்ற மீள்நிரப்பு (residuary) / பொதுச் (common) சட்டமானது :

(1) ஆங்கிலச் சட்டம் (2) உரோமன் டச்சுச் சட்டம்
(3) தேசவழமைச் சட்டம் (4) கண்டியன் சட்டம்

**1.2** கடமைகளின் மீறுகை காரணமாகத் தோன்றும் குடியியல் தவறுகள் மற்றும் பிழைகள் (ஒப்பந்தம் ஒன்றிலிருந்து தோன்றுபவை தவிர்ந்த) ஆகியவற்றுடன் தொடர்புபட்ட சட்டம் எவ்வாறு அழைக்கப் படுகிறது?

(1) குடும்பச் சட்டம் (Family law) (2) நம்பிக்கைப்பொறுப்புச் சட்டம் (Trusts law)
(3) தீங்கியல் சட்டம் (Torts law) (4) ஒப்பந்தச் சட்டம் (Contract law)

**1.3** பின்வருவனவற்றுள் இலங்கையிலுள்ள இறுதியான மேன்முறையீட்டு (final appellate) நீதிமன்றம் எது?

(1) நீதவான் நீதிமன்றம் (Magistrate's court) (2) உயர் நீதிமன்றம் (High court)
(3) மாவட்ட நீதிமன்றம் (District court) (4) உச்ச நீதிமன்றம் (Supreme court)

**1.4** பின்வருவனவற்றுள் எழுத்து மூலம் வெளிப்படையாக உருவாகின்ற முகவராண்மைக்கான ஓர் ஆவணமாகக் **கருதப்படாதது** எது?

(1) பங்குதாரர் தொடர்பான பதிலிப்படிவம் (2) அட்டோணித் தத்துவம்

(3) அதிகாரம் தொடர்பான கடிதம் (4) நன்கொடை உறுதி (Deed of gift)

**1.5** நபர் ஒருவர் ஓர் ஊழியராக இருக்கின்றாரா அல்லது ஒரு சுயாதீன ஒப்பந்தகாரராக இருக்கின்றாரா என்பதைத் தீர்மானிப்பதுடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக :

**(a)** ஊழியர்கள் மாத்திரமே, ஊழியர் சேமலாப நிதி (EPF), ஊழியர் நம்பிக்கை நிதி (ETF), பணிக்கொடை போன்ற குறிப்பிட்ட நன்மைகள் மற்றும் பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள் ஆவர்.

**(b)** ஊழியர்களால் கிடைக்கும் தொழில் வருமானத்திற்காக தொழில்தருநர் வருமான வரிச் சட்டத்தின் கீழ் PAYE செலுத்த வேண்டிய கடப்பாடுடையவர் ஆவார்.

**(c)** தொழில்தருநர் வங்குரோத்து நிலையை அடைந்தால், ஊழியர்கள் தங்களது சம்பள நிலுவைகள், தொழில் முடிவுறுத்தலுக்கான நட்டஈடு போன்ற உரிமைக் கோரிக்கைகளுக்கு முன்னுரிமையினைக் கொண்டிருக்க முடியாது.

மேலுள்ளவற்றுள் சரியான கூற்று / கூற்றுக்களாவன :

(1) **(a)** மாத்திரம் (2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்

(3) **(c)** மாத்திரம் (4) மேற்கூறிய எல்லாம்.

**1.6** பின்வருவனவற்றுள் மாற்றுண்டியல் (Bill of Exchange) ஒன்றின் பண்பியல்பொன்றாக (characteristic) **அமையாதது** எது?

(1) இது ஒரு எழுத்து மூலமான நிபந்தனைக் கட்டளை (conditional order) ஆகும்.

(2) இது வழங்கப்படும் நபரினால் கையொப்பமிடப்பட்டு, முகவரியிடப்பட்ட நபருக்கு வழங்குமாறு தேவைப்படுத்துகிறது.

(3) கொடுப்பனவுக்கான குறிப்பிட்ட பணத்தொகை ஒன்று காணப்படுகிறது.

(4) இது குறிப்பிட்ட காலப்பகுதியில் அல்லது குறித்துரைக்கப்பட்ட எதிர்காலத்தில் கோரும்போது கொடுப்பனவு செய்யப்படுவதற்காக எழுதப்படுதல் வேண்டும்.

**1.7** பின்வருவனவற்றுள் 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின்படி, புலமைச்சொத்து ஒன்றாகக் கருதப்பட **முடியாதது** எது?

(1) ஆக்கவுரிமை (Patent) (2) வளரும் பயிர் (Growing Crop)

(3) கைத்தொழில் வடிவமைப்பு (Industrial Design) (4) பதிப்புரிமை (Copyright)

*இல. **1.8** முதல் **1.10** வரையான வினாக்களுக்கான சுருக்க விடைகளை வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.8** மாவட்ட நீதிமன்றத்தினால் கையாளப்படுகின்ற குடியியல் பிரச்சினைகள் (civil issues) இரண்டினைக் (02) கூறுக.

**1.9** காசோலை ஒன்றின் இரண்டு (02) அம்சங்களை (features) அடையாளங் காண்க.

**1.10** 2017 யூலை 30 ஆந் திகதி நிறுவனம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்த ஊழியர் ஒருவருக்கு 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த லீவாகப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய நாட்களின் எண்ணிக்கையினை அடையாளங் காண்க. *(இந்நிறுவனம் 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின்கீழ் உள்ளடங்குவதாகக் கருதுக)*:

(வெவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 02

**சுனில்** என்பவர் கிலோகிராம் ஒன்று ரூ. 80/- வீதம் 1,000 கிலோகிராம் சீனியை வாங்குவதற்கு **பியால்** என்பவருக்கு அதிகாரம் வழங்கியுள்ளார். **பியால்** மொத்த விற்பனைச் சந்தைக்குச் சென்றதுடன் அங்கு சீனியின் விலை உயர்வடைந்திருப்பதைக் காண்கிறார். எவ்வாறாயினும், **நிமால்** என்பவரிடமிருந்து கிலோகிராம் ஒன்று ரூ. 100/- வீதம் 1,000 கிலோகிராம் சீனியை **பியால்** வாங்குகிறார். **பியால், சுனில்** சார்பாகச் சீனியை வாங்குகிறார் என்பதைக் குறிப்பிடாது தனது சொந்தப் பெயரிலேயே தொகையளவுச் சீனியையும் வாங்கியுள்ளார். எவ்வாறாயினும், பின்னர் **சுனில்** இந்தக் கொடுக்கல் வாங்கலை ஏற்புறுதி (ratified) செய்திருந்தார். அதன் பின்னர், **பியால்**, **நிமாலுக்குக்** கொடுப்பனவு செய்வதற்கு மறுத்ததுடன் தான் தனக்காக சீனியை வாங்கவில்லை என்பதையும் தெரிவித்திருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

தனது பணத்தை வசூலிப்பதற்கு **நிமாலுக்கு** இருக்கின்ற சட்ட உரிமைகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

கணக்காளர்கள் பொதுமக்களின் நாட்டங்கள் தொடர்பில் செயற்படுவதற்கான பொறுப்பினை ஏற்றுக் கொள்வதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளனர். எனவே, தனிநபர் வாடிக்கையாளர் ஒருவரின் அல்லது தொழில்தருநரின் தேவைகளைத் திருப்திப்படுத்துவது மாத்திரமன்றி பொதுமக்களின் தேவைகளைத் திருப்திப்படுத்துவதுகூட கணக்காளர் ஒருவரின் பொறுப்பாகும். பொதுமக்களின் நாட்டங்கள் தொடர்பில் செயற்படுவதன் பொருட்டு, தொழில்சார் ஒழுக்கநெறிகளின் ஆறு அடிப்படைக் கோட்பாடுகள் (fundamental principles) காணப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

தொழில்சார் ஒழுக்கநெறிகளின் (professional ethics) அடிப்படைக் கோட்பாடுகள் இரண்டினை (02) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

**A** என்பவர் **B** என்பவரிடமிருந்து கடனொன்றை பெற்றுள்ளதுடன் அதற்குப் பிணையாக **B** யின் பெயரில் எழுதப்பட்ட கட்டளைக் காசோலையொன்றினை (order cheque) வழங்கியிருந்தார். **B** பொதுவான குறுக்குக் கோடிடல் ஒன்றினை அதற்கு இட்டிருந்தார். அதன் பின்னர், இந்தக் குறுக்குக் கோடிட்ட காசோலையை **C** என்பவர் திருடியிருந்ததுடன் அதனை வங்கியின் கருமபீடத்திலும் சமர்ப்பித்திருந்தார். வங்கியானது அதன்மீது இடப்பட்டிருக்கும் குறுக்குக்கோடிடலைக் கவனிக்கத் தவறியிருந்ததுடன் காசோலையில் எழுதப்பட்டிருந்த பெறுமதியினை **C** இற்கு வழங்கியிருந்தது. **A** வங்கிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானித்துள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

வங்கியிடமிருந்து பணத்தினை மீளப்பெறுவதற்கு (recover) **A** இற்கு உரித்துள்ளதா (entitled) என்பது பற்றி **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 05

இலங்கையில் கம்பனிகளுக்கான பிரதான சட்டமாக இருப்பது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் ஆகும். கம்பனி ஒன்றிற்கான பல்வேறு அம்சங்கள் (features) காணப்படுகின்றன. சட்ட ஆளுமை என்பது அத்தகைய அம்சங்களுள் ஒன்றாகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

கம்பனி ஒன்று தொடர்பான சட்ட ஆளுமை எண்ணக்கருவை (concept of legal personality) **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

## வினா 06

கார்களை வாங்கி விற்கின்ற **ஓட்டோசோன் (AutoZone)** என்னும் பங்குடமை வியாபாரமொன்றில் **அமல்** மற்றும் **ரமல்** ஆகியோர் பங்காளர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கிடையில் எவ்வித பங்குடமை உடன்படிக்கையும் காணப்படவில்லை. **அமல்** பங்குடமை சார்பாக ரூ. 50,000/- கழிவுடன் (discount) கார் ஒன்றினை வாங்கியிருந்தார். எவ்வாறாயினும், அவர் கழிவு பற்றி **ரமலுக்குத்** தெரிவிக்காததுடன் அந்தக் கொடுக்கல் வாங்கலின் மூலம் ரூ. 50,000/- இனை இரகசிய இலாபமாக ஈட்டியிருந்தார். அதன் பின்னர், இந்த இரகசிய இலாபம் பற்றி **ரமல்** கண்டுபிடித்திருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**ரமலுக்கு** உள்ள சட்ட உரிமைகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

(a) *"கடல் கனியுப்புகள் சேர்த்த கிறீம்"* என விபரிக்கப்பட்டிருந்த அழகுசாதன கிறீம் பொதி ஒன்றினை **ராணி** என்பவருக்கு விற்பனை செய்ய **ராஜா** என்பவர் இசைவு தெரிவித்திருந்ததுடன் அந்தக் கிறீம், மாதிரிக்கு ஒப்பானது (equal to the sample) என்ற உத்தரவாதமும் வழங்கப்பட்டது. **ராஜா** மாதிரிக்கு ஒப்பான அழகுசாதன கிறீம் பொதியினை **ராணிக்கு** விநியோகித்திருந்தார். ஆயினும் அந்தக் கிறீமின் உள்ளடக்கத்தில் கடல் கனியுப்புகள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

இவ்விடயம் தொடர்பில் **ராணி**க்கு உள்ள சட்ட உரிமைகளை **ஆராய்க.** (05 புள்ளிகள்)

(b) **ஹசன்** என்பவர் யப்பானிலிருந்து ஐந்து மோட்டார் கார்களை இறக்குமதி செய்ய விரும்புகிறார். நீங்கள் **ஹசன்** இன் வங்கியாளர் ஆவீர்கள். **ஹசன்** சர்வதேச வியாபாரத்தில் பயன்படுத்துவதற்கான கொடுப்பனவு முறை ஒன்றினைத் தெரிவுசெய்வதில் உங்களின் ஆலோசனையை எதிர்பார்க்கிறார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**ஹசனால்** பயன்படுத்தப்படக்கூடிய பொருத்தமான கொடுப்பனவு முறை ஒன்றினை **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 08

**அமாலியும் சுனாலியும்** சிறந்த நண்பிகளாவர். அவர்கள் **வரையறுக்கப்பட்ட றிச் லைவ் இன்சூரன்ஸ் கம்பனியால்** நடத்தப்பட்ட செயலமர்வு ஒன்றில் பங்கேற்றிருந்தனர். இதன் விளைவாக, **அமாலி** தனக்கும் தனது கணவர் **சுமித்திற்கும்,** ஆயுளைக் காப்புறுதியிடுவதற்காக ஆயுள் காப்புறுதி ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு விரும்பினார். **சுனாலியும்**கூட தனது மூத்த சகோதரன் **சமன்** மற்றும் தனது பெற்றோர் ஆகியோரின் ஆயுளைக் காப்புறுதியிடுவதற்காக ஆயுள் காப்புறுதி ஒன்றினைப் பெற்றுக்கொள்ள விரும்பினார்.

**அமாலியும் சுனாலியும்** மேற்படி நோக்கங்களுக்காக விண்ணப்பித்திருந்ததுடன் **சுனாலியால்** செய்யப்பட்ட விண்ணப்பத்தை காப்புறுதிக் கம்பனி நிராகரித்திருந்தது. **அமாலியின்** விண்ணப்பங்கள் காப்புறுதி அலுவலகத்தில் இன்னும் காத்திருப்புப் பட்டியலில் இருக்கின்றன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) **அமாலியால்** செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வெற்றிகரமாக முடியுமா என்பதை **ஆராய்க.** (05 புள்ளிகள்)

(b) **சுனாலியால்** செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணங்களை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 09

(a) 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டமானது நுகர்வோர் விவகார அதிகாரசபைத் தாபனத்தை உருவாக்கியுள்ளது. நுகர்வோர் விவகார அதிகாரசபையானது நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக வியாபாரிகளுக்குக் குறிப்பிட்ட கடப்பாடுகளை விதிக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) நுகர்வோர் விவகார அதிகாரசபையின் பிரதான தொழிற்பாடுகள் (functions) இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் விதிக்கப்பட்டுள்ள வியாபாரிகளின் கடப்பாடுகள் (obligations) இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) ஊழியர் சேமலாப நிதியச் (EPF) சட்டத்தின் நோக்கம், பங்களிப்புச் சேமலாப நிதியம் ஒன்றின் ஊடாக ஊழியர்களுக்கான ஓய்வுபெறல் நன்மைகளை (retiring benefits) உறுதிப்படுத்துவதாகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

நபர் ஒருவர் தனது EPF பங்களிப்பினை உரிமைக் கோரிக்கை (claim) செய்வதற்கு உரித்துடைய வராக இருக்கின்ற சந்தர்ப்பங்கள் (instances) நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# <u>பகுதி D</u>

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 10

(a) **மாலா** என்பவர் தனது வீட்டினை **குமாரி** என்பவருக்கு ரூ. 2 மில்லியனுக்கு விற்பனை செய்வதற்கான தனது விருப்பத்தினைத் தெரிவித்திருந்தார். **குமாரி,** தான் இவ்வீட்டினை ரூ. 2 மில்லியனுக்கு வாங்குவதாகவும் ஆனால் கொடுப்பனவினை ஒவ்வொன்றும் ரூ. 0.5 மில்லியன் கொண்ட 4 தவணைகளில் செலுத்துவதாகவும் தெரிவித்திருந்தார். **மாலா** கொடுப்பனவினைத் தவணைகளில் பெற்றுக் கொள்வதற்கு மறுத்துவிட்டார். தற்போது, **குமாரி** ஒரே தடவையில் முழுத் தொகையான ரூ. 2 மில்லியனையும் செலுத்துவதற்கு இணங்கியுள்ளார். ஆயினும் **மாலா** தனது வீட்டினை **குமாரிக்கு** விற்பனை செய்ய மறுத்துவிட்டார்.

**மாலாவின்** சகோதரர் **பியால்** இலங்கையின் கலாசார மரபுரிமைகள் பற்றிய ஒரு ஆய்வினை மேற்கொள்கிறார். அவர், காலியில் நடைபெறும் பிரதான வருடாந்த ஊர்வலத்தினை (பெரஹரா) பார்வையிடுவதற்காக காலியிலுள்ள **பரடைஸ் ஹோட்டலில்** அறையொன்றை முன்பதிவு (reservation) செய்துள்ளார். பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக ஊர்வலம் இரத்துச்செய்யப் பட்டுள்ளது. **பியால்** தான் அறையை முன்பதிவு செய்வதற்காகச் செலுத்திய பணத்தினை மீள வழங்குமாறு ஹோட்டலிடம் கோரியிருந்தார். ஹோட்டல் அதனை மறுத்திருந்ததுடன் முன்பதிவு செய்யப்பட்ட திகதியில் ஹோட்டலில் தங்குமாறும் அவரிடம் கூறியிருந்தது. ஹோட்டலின் இந்தத் தீர்மானம் தொடர்பில் **பியால்** ஏமாற்றமடைந்துள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(i) **மாலாவுக்கும் குமாரிக்குமிடையே** செல்லுபடியான ஒப்பந்தமொன்று உள்ளதா என்பதை **ஆராய்க.** (08 புள்ளிகள்)

(ii) **பியாலால்** செய்யப்பட்ட ஹோட்டல் அறை முன்பதிவுக் கொடுப்பனவு தொடர்பில் அவருக்கு உள்ள சட்ட உரிமைகளை **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(b) **குசல்** என்பவர் வருடிகள் (scanners), விசைப் பலகைகள் (key boards), அச்சுப்பொறிகள் (printers) போன்ற கணினிப் பொருட்கள் மற்றும் மின் உபகரணப் பொருட்களின் விற்பனையாளர் ஆவார். 2018 மார்ச் 30 ஆந் திகதி **மாயா, ரவிந்து, தயால்** ஆகிய மூன்று வாடிக்கையாளர்கள் **குசலினது** கடைக்குச் சென்றிருந்தனர். பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் அங்கு இடம்பெற்றன :

- **குசல்** வருடி (scanner) ஒன்றினை **மாயாவுக்கு** விற்பனை செய்ய இணங்கியிருந்தார். **மாயா** கட்டளை (order) செய்த நேரத்தில் அவர் தேடிய வருடியின் சரியான மாதிரியை (மொடல்) **குசல்** தனது இருப்பில் கொண்டிருக்கவில்லை. **குசல்,** ஒரு மாதத்தின் பின்னர் வருடியின் சரியான மாதிரியை தான் இறக்குமதி செய்வதாக **மாயாவிற்கு** வாக்குறுதி வழங்கியுள்ளார்.
- அதே நாளில் **ரவிந்து குசலிடம்** ஒரு விசைப் பலகைக்கு (key board) கட்டளை (order) செய்திருந்ததுடன் குறித்த விசைப்பலகையை **குசல்** அதேநாளில் **ரவிந்துவிற்கு** வழங்கியிருந்தார்.
- அதே நாளில், **தயாலுக்கு** அச்சுப்பொறி (printer) ஒன்றினை விற்பனை செய்வதற்கு **குசல்** இணங்கியிருந்ததுடன் அதனை புது வருடம் கொண்டாடப்படும் நாளிற்கு 3 நாட்களுக்கு முன்பாக அதனை விநியோகம் செய்வதாக (delivery) அவர் வாக்குறுதி அளித்திருந்தார். **தயால்** முழுத் தொகையினையும் செலுத்தியிருந்தபோதிலும், **குசல்** தான் இணங்கியதன்படி அச்சுப்பொறியினை விநியோகம் செய்யவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(i) **குசல்** மற்றும் **மாயாவிற்கிடையில்** பொருட்கள் விற்பனை தொடர்பான ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(ii) **குசல்** மற்றும் **ரவிந்துவிற்கிடையில்** பொருட்கள் விற்பனை தொடர்பான ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(iii) ஒரு கொள்வனவாளன் என்ற வகையில் **தயாலுக்கு** இருக்கின்ற சட்ட உரிமைகளையும் தீர்வுகளையும் (legal rights and remedies) **ஆராய்க.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |